(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 12 (4).]

# பாராளுமன்றம்

## 12 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2014 செத்தெம்பர் 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2014 ஒற்றோபர் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4847/ ’14

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் சூதாட்ட வியாபாரத்தை மேற்கொள்வதற்கு இது வரைக்கும் விநியோகிக்கப்பட்டள்ள உரிமங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய உரிமங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் மற்றும், அல்லது கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட திகதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆவது பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 செத்தெம்பர் 05 ஆம் திகதிய 1878/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.09.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

## 2014 ஒற்றோபர் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4712/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (I) முருங்கன் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மலுவராயர், கட்டை அடம்பன், மடு வீதி, முருங்கன் முகவரியில் வசித்த திருமதி. மாரிமுத்து சண்முகம் மற்றும் இவரது குடும்ப அங்கத்தவர்கள் எல்.ரி.ரி.ஈ அச்சுறுத்தலினால் அவ்வீட்டை கைவிட்டுச்சென்று அகதிகளாக பிறிதொரு பிரதேசத்தில் வசித்த காலப்பகுதியில் இவர்களின் வீடு அமைந்திருந்த இடத்தில் அதிவலுவுள்ள மின்சாரக் கம்பிகளை இடுவதற்கான பாரிய மின்சாரக் கோபுரமொன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இவர்களின் வீட்டை அகற்றி அந்த இடத்தில் மின்சாரக் கோபுரமொன்று நிர்மாணிக்கப்பட்டமைக்காக திருமதி. மாரிமுத்து சண்முகத்திற்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுவதை விதந்துரைத்து இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் DGM (P&HM-R1) GEN இலக்கமும் 2011.07.07 ஆம் திகதியும் கொண்ட கடிதம் மூலம் வவுனியாவில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குடியமர்ந்திருந்த வீட்டினை இழந்து நிர்க்கதிநிலைக்கு உள்ளாகியுள்ள திருமதி. சண்முகத்திற்கு வழங்கவேண்டிய நட்டஈட்டுத் தொகை இற்றைவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாது;

(ii) மேற்படி நட்டஈட்டுத் தொகையினை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2014 ஒற்றோபர் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2691/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற மனித வள மற்றும் பௌதீக வள பற்றாக்குறைகள் யாவையென்பதையும்;

(ii) இப்பற்றாக்குறைகளையும் குறைபாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் உள்ள பீடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டுக்காக மேற்படி பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகையானது, 2011 ஆம் ஆண்டுக்காக இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட பணத் தொகைக்கு ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ள அல்லது குறைவடைந்துள்ள அளவு எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3270/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்று உள்ளவாறு நாட்டில் உள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையையும்;

(ii) 2011, 2012 ஆகிய வருடங்களில் டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையையும்;

(iii) அத்தகைய உதவிக்கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கருத்திற்கொள்ளப்பட்ட மூலப் பிரமாணங்களையும்;

(iv) 2010, 2011, 2012 ஆகிய வருடங்களில் மாதாந்தம் மற்றும் வருடாந்தம் பெற்றுக்கொண்ட உதவித் தொகைகளின் அடிப்படையில் சமுர்த்தி கிடைக்கப்பெறும் குடும்பங்களின் விபரங்களையும் வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) விலைக்கு வாங்கும் ஆற்றல் அல்லது கொள்வனவு செய்யும் ஆற்றல் அல்லது பணவீக்கம் சார் போக்குகள் தொடர்பாக சமுர்த்தி பெறுநர்களுக்கு நிதியங்களின் மீள் ஒதுக்கீடொன்று உள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3958/ '13

கௌரவ புத்திக பதிரண,— வன சீவராசிகள், வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் யானை – மனித மோதல் காரணமாக வருடாந்தம் பெருமளவு மனித உயிர்கள் இழக்கப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவ்வாறு இழக்கப்பட்டுள்ள மனித உயிர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் யானை - மனிதன் மோதல்கள் காரணமாக அழிவடைந்துள்ள மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்காக செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மிதிகம அரச வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற மருத்துவர் சரத் விமலசூரிய யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக மின்சார வேலியொன்றை உருவாக்கியுள்ளார் என்பதையும்;

(ii) இந்த உபகரணத்தை பரிசோதனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக வனசீவராசிகள் அலுவலர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) அது இன்றுவரை திருப்பிக் கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மருத்துவர் சரத் விமலசூரிய குறைந்த செலவில் உருவாக்கியுள்ள மின்சார வேலியை பரிசோதனை செய்து அதனை யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4296/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை பிரதேச மக்களுக்கு குடிநீரை வழங்குகின்ற நீர் மூலங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நீர் மூலங்களிலிருந்து நீரை வழங்குகின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(iii) 2013 ஜூன் மாதம் முதல் திருகோணமலை பிரதேச மக்கள் எதிர்நோக்கிய குடிநீர் பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி குடிநீர்ப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) திருகோணமலை பிரதேசத்தில் காணப்படுகின்ற குடிநீர் பற்றாக்குறைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக மேலதிக நீர் வழங்கல் மூலமொன்று பயன்படுத்தப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4443/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக குருநாகல் மாவட்டத்தினுள் இனங்காணப்பட்ட வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்க உத்தேசிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாது என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4464/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் ஆட்பதிவுத் திணைக்களத்தில் அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 11 பாதுகாப்பு அட்டைகளும் 02 மல்டி மீடியா கருவிகளும் காணாமற்போயுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் இனங்காணப் பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இந்நபர்களால் ஏற்பட்டுள்ள நட்டம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கறுவாத்தோட்டம் பொலீசாரினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் மூலம் உரிய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது குற்றவாளிகள் இனங்காணப்பட்டு உள்ளனரா என்பதையும்;

(ii) தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புடையதொரு நிறுவனத்தில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான அரசின் நிலைப்பாடு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

4640/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி கம்பனிகளில் பாரியளவில் விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்டுள்ள விவசாய இரசாயனப் பொருட்கள் வகைகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிட்ட கம்பனிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள திகதிகள்;

(ii) தடைசெய்யப்படும்வரை மேற்படி விவசாய இரசாயனப் பொருட்களை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள்;

(iii) தடைசெய்யப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ததன் காரணமாக கரைநிரல் படுத்தப்பட்டுள்ள (Black list) நிறுவனங்களின் பெயர்கள்

என்பவற்றை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கரைநிரல்படுத்தலுக்கு உள்ளாகின்ற நிறுவனங்களின் பணிப்பாளர்கள் வேறு பெயர்களில் நிறுவனங்களை பதிவுசெய்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4761/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,—கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் 2012 ஆம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) சுய தொழிலாக சிறிய அளவிலான கோழிப்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கானதொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4796/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2013ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சினால் இத்தாலியில் ஹோட்டல் துறையில் தொழில் வாய்ப்புக்களுக்காக இலங்கையர்கள் அனுப்பப்பட்டார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அனுப்பப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) மேற்படி குழுவினரைத் தேர்ந்தெடுப்பதற்காக பத்திரிகை விளம்பரங்கள் அல்லது வேறு பிரச்சார வழிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில் அவை யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4798/ '14

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் அது செயலிழந்த தடவைகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயலிழந்து காணப்பட்ட காலகட்டம் வெவ்வேறாக யாது;

(ii) இதுவரை அது செயலிழந்து காணப்பட்ட சந்தர்ப்பங்களில் அதனை திருத்துவதற்காக செலவான மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி திருத்தத்திற்காக செலவான பணத் தொகை மின் உற்பத்தி நிலையம் செயலிழந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி செயலிழப்பானது ஏற்புடைய உபகரணங்களின் உத்தரவாத காலத்தினுள் இடம்பெற்றிருப்பின் மேலே குறிப்பிட்டவாறு பணம் செலவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட செயலிழப்பு காரணமாக மேற்படி காலகட்டங்களினுள் வேறு மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து தேசிய மின்சார முறைமைக்கு மின்சாரத்தை பெறுவதற்காக செலவிடப்பட்ட மேலதிகப் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்பு காரணமாக செலவான மேலதிகப் பணத் தொகையை கூட்டுகின்றபோது ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4941/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து வருடா வருடம் ஒவ்வொரு உயர் கல்வி நிறுவன ரீதியாகவும் மஹபொல புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) 1981 முதல் இதுவரையில் மஹபொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு பங்களிப்புத் தொகைகள் கிடைக்கப்பெறும் வழிவகைகள் யாவை;

(ii) மஹபொல புலமைப் பரிசில் வழங்குவதற்காக குறைந்த வருமானம் பெறும் மாணவர்களைத் தேர்ந்தெத்தல் திருப்தியடையக்கூடிய உரிய முறையியலொன்றுக்கு அமைய நடைபெறுகின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) உயர் கல்வியை பூர்த்தி செய்த மஹபொல புலமைப்பரிசில் பயனாளிகள் இதிலிருந்து பெற்றுக்கொள்ளும் பயன்கள் தொடர்பில் பின்னாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5027/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது உள்நாட்டுச் சந்தையில் சந்தைப்படுத்தப்படும் தெம்பூட்டும் பானங்கள் (Energy Drinks) வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பானங்களிடையே காணப்படுகின்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பானங்கள் வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தெம்பூட்டும் பானங்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினைத் தீர்மானிக்கும் பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டினுள் தெம்பூட்டும் பானங்கள் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5072/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் விசேட கருத்திட்ட நடவடிக்கை பணிப்பாளர் என்ற பதவியொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பதவிக்குரிய கடமைப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) தொல்பொருளியல் திணைக்களத்தில் மேற்படி பதவி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டும் திகதியும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது தொல்பொருளியல் திணைக்களத்தில் விசேட கருத்திட்ட நடவடிக்கை பணிப்பாளராக பணியாற்றுகின்ற நபரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவியை வகிப்பதற்கு மேற்படி நபர் கொண்டுள்ள கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கு இராணுவ அலுவலரொருவர் நியமிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5199/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'பிம் சவிய' நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(ii) நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றுக்கு முரணான வகையில் 'பிம் சவிய' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணிகளை அளவை செய்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி காணி அளவையானது எந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளபட்டதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில், வழக்கு எண் 2061 என்ற பிரிவிடல் வழக்கின் தீர்ப்பிற்கு இணங்க 3 பகுதிகளாக பிரிக்கப்பட்ட காணியொன்றை மேற்படி தீர்ப்பிற்கு முரணாக 'பிம் சவிய' உத்தியோகத்தர்கள் 2 பகுதிகளாக பிரித்துள்ளனரென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி காணியை இவ்வாறு பிரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5259/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெல்தொட்ட – பல்லேகம பிரதான வீதி நீண்டகாலமாக கடுமையாக சிதைவடைந்துள்ளதால் இவ்வீதியை பயன்படுத்துகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) மழை காலத்தில் மேற்படி வீதியை பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தெல்தொட்ட மற்றும் பல்லேகம பிரதேசத்தில் வாழும் மக்களின் நலனுக்காக மேற்படி பிரதான வீதியை மிகத் துரிதமாக மறுசீரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 ஒற்றோபர் 23, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2693/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் கல்வி சார் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தின் கீழுள்ள பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த பீடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிலவும் மானிட மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்துக்கான அபிவிருத்தி திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(v) அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்;

(vi) மேற்படி திகதி ஏற்பாட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் காலம் கட்டம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3309/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தற்போதுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் மொத்த எண்ணிக்கையையும்;

(ii) மேற்கூறிய ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்க வேண்டிய வைத்தியர்கள், தாதிமார்கள், உதவியாட்கள், தொழிலாளர்கள், பிற தரங்களிலுள்ள அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(iii) அவ்வைத்தியசாலைகளில் மேற்கூறிய ஒவ்வொரு பதவிகளிலும் தற்போது சேவையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையையும்;

(iv) மேற்கூறிய வைத்தியசாலைகளில் பதவி வெற்றிடங்கள் ஏதேனும் காணப்படுமாயின் அவற்றை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) அவ்வாறெனின், அது மேற்கொள்ளப்படும் காலப்பகுதியையும்;

(vi) மேற்கூறிய வைத்தியசாலைகளில் மிகைப் பணியாளர்கள் காணப்படின், அவர்கள் ஈடுபடுத்தப்படும் பணிகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3960/ ’13

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லுனுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் கீழுள்ள தோட்டங்களிலிருந்த சுமார் 300 கறவை மாடுகள் போலியான கேள்விப்பத்திரம் கோரப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளில் கறவைப் பசுக்களும், கன்றுக் குட்டிகளும், சினைப் பசுக்களும் இருந்தனவென்பதையும்;

(iii) அரச சட்ட விதிகளுக்கமைய இறைச்சிக்காக காளை மாடுகளை மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறு விற்பனை செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மாட்டினதும் வயது மற்றும் நிறை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளை கொள்வனவு செய்துள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மாடுகள் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4091/ ’13

கௌரவ அனுர திஸாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் செயலற்றுப் போன நாட்கள் இருந்தனவா;

(ii) அவ்வாறு செயலற்றுப்போகச் செய்தமைக்கு ஏதுவான காரணங்கள் யாவை;

(iii) மசகெண்ணையை உரிய வகையில் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதா;

(iv) அந்நாட்கள் யாவை;

(v) மசகெண்ணெய் இன்மை காரணமாக சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் மொத்தமாக எவ்வளவு;

(vi) மசகெண்ணெய் பற்றாக்குறை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில் அவ்விசாரணையில் தவறாளிகளாக காணப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4227/ '13

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபை பிரதிநிதிகள், நகர சபை பிரதிநிதிகள் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகளில் தற்போது, ஊழல், குற்றச்செயல் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டமை காரணமாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், உரித்தான அரசியல் கட்சிகள் மற்றும் இவர்கள் மாகாண சபையில், நகர சபையில் மற்றும் பிரதேச சபையில் வகித்த அல்லது தற்போது வகித்துவருகின்ற பதவிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் தற்போது சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டவாறு ஊழல் பேர்வழிகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதன் காரணமாக திட்டமிடப்பட்ட ஊழல்கள், குற்றச் செயல்கள் மற்றும் பலதரப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஊழல் பேர்வழிகள் மற்றும் குற்றவாளிகள் பிரதேச மற்றும் மாகாண சபை அரசியலில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4297/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க களஞ்சியங்களிலுள்ள மேலதிக நெல் இருப்புகளை விலங்கு உணவுக்காக குறைந்த விலைக்கு விற்பனை செய்யத்தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல் இருப்புகளை குறைந்த விலையில் விலங்குகளுக்கான உணவாக விற்பனை செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசாங்க களஞ்சியங்கள் நெல்லைக் கொள்வனவு செய்யும் போது ஈரத்தன்மையுடனான நிறை பரிசீலிக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) கொள்வனவு செய்யும் போது நெல் இருப்புகளில் காணப்பட வேண்டிய ஈரத்தன்மையுடனான நிறை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4568/ '13

கௌரவ துனேஷ் கன்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்கள் மிகக்கூடுதலான வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு ஈட்டித்தரும் பத்து மத்திய கிழக்கு நாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றும் இலங்கையர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் இலங்கைத் தூதரகங்கள் அமைந்துள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தூதரகத்திலும் சேவையாற்றுகின்ற மொழிபெயர்ப்பு அலுவலர்களினதும் தொழில் அலுவலர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நாடுகளில் சேவையாற்றுகின்ற இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஒப்பீட்டளவில் போதியளவு பணியாட்டொகுதியினர் தூதரகங்களில் சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதை எற்றுக் கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை ஊழியர்கள் மேற்படி நாடுகளில் பொலிசாரால் கைது செய்யப்படும் பட்சத்தில் உடனேயே அது தொடர்பாக இலங்கை தூதரகங்களுக்கு அறிவிப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கைக்கும் மேற்படி நாடுகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அவ்வாறான முறையியலொன்றை வகுப்பதன் மூலம் சட்டப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற இலங்கை ஊழியர்களுக்கு தூதரகங்களின் ஆதரவைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4586/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) நுரைச்சோலையை மின் உற்பத்தி நிலையத்தில் பயன்படுத்துவதற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இறக்குமதி தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதியுடன் தொடர்புபட்ட நிலக்கரியின் அளவை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விடயம் குறித்து ஏன் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலக்கரித்தொகுதி இறக்குமதியாளரின் பெயர் என்னவென்பதையும்;

(ii) சொல்லப்பட்ட இறக்குமதியாளர் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார் என்பதையும்;

(iii) இறக்குமதியாளரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் நிலக்கரி இறக்குமதி தொடர்பில் இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதைத் தவிர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4641/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோய் பற்றிய விதப்புரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2012 நவம்பர் மாதம் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) அக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வமைச்சர்களின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட அமைச்சரவை உபகுழுவினால் புலமைசாலிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) மேற்படி புலமைசாலிகள் குழுவினால் சிறுநீரக நோயைத் தடுப்பதற்காகவும் நோயாளர்கைளைப் பராமரிப்பதற்காகவும் முன்வைக்கப்பட்ட விதப்புரைகள் யாவை;

(iv) அவ்விதப்புரைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா;

(v) ஆமெனில் அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4767/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வருடாந்தம் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமையின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமை மாவின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) நாளொன்றிற்கு எவ்வளவு பாண் நுகர்வு செய்யப்படுகின்றது என்பதையும்;

(v) பாண் நுகர்வைக் குறைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4942/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கித்துல் செய்கை பரவலாக காணப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) கித்துல் செய்கையில் ஈடுகின்ற மற்றும் கித்துல் சார்ந்த உற்பத்திகள் மூலமாக வருமானம் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) கித்துல் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அச்செய்கையினை பெருந்தோட்டங்கள்/தோட்டங்கள் மட்டத்தில் மேற்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) கித்துல் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) கித்துல் உற்பத்திகளை வெளிநாடுகளில் பிரல்யப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) ஆமெனின், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கித்துல் சார்ந்த உற்பத்தி வகைகள் யாவை என்பதையும்;

(ii) இவற்றின் வருடாந்த உற்பத்திகள் பற்றிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவற்றின் அளவுகள் யாவை என்பதையும்;

(iv) கித்துல் செய்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச துறை ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கு ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக அரசாங்கம் வருடாந்தம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) கித்துல் உற்பத்திக் கைத்தொழில் மூலம் அரசாங்கம் ஈட்டும் வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5034/ '14

கௌரவ அ கில விராஜ் காரியவசம்,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வடமேற்கிற்கு மகாவலி நீரை திசைதிருப்பும் நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இதுவரை அதன் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதானமான கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிதி மூலங்கள் யாவை என்பதையும்;

(vi) வடமேற்கிற்கு மகாவலி நீரைத் திசைதிருப்பும் நிகழ்ச்சித்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள காலஎல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5168/ '14

கௌரவ ஆர்.எம் ரஞ்சித் மத்துமபண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிபிளை, தியகொபல, 'மயுரசிறி' இல் வசிக்கும் திரு. ஏ.எம். கருணாபால இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியராக 1980.12.16 ஆம் திகதி சேவையில் இணைந்து 2013.06.24 ஆம் திகதி ஓய்வுபெற்றாரென்பதையும்;

(ii) 32 வருடகால சேவையை பூர்த்திசெய்துள்ள இவருக்கு ரூபா 1,250,400.00 பணிக்கொடையாக கிடைக்கவேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. ஏ.எம். கருணாபாலவிற்குரிய பணிக்கொடையை துரிதமாக இவருக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5201/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 13 (உ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய தெற்கு அபிவிருத்தி நிதி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தானதாக காணப்பட்ட மேற்படி நிறுவனத்தை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தின் ஊழியர்களின் சேவை 2014 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதாக இவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி ஊழியர்களின் தொழில் இழக்கச் செய்யப்படுவதில் நியாயத்தன்மை உள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி நிறுவனத்திற்கு உரித்தான ஆதனங்கள் மற்றும் வாகனங்கள் தெற்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பேற்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5359/ '14

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பலாலி விமான நிலையத்தின் நிர்மாண வேலைகள் எப்போது பூர்த்தியடையுமென்பதையும்;

(ii) பொதுமக்கள் பாவனைக்காக அது எப்போது திறக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 ஒற்றோபர் 24, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2695/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் மஹபெலெஸ்ஸ கிராமத்தை அண்டியதாக உலகில் பிரசித்தி பெற்ற மதுநாகல வெந்நீர் ஊற்றுக்கள் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்பட்டதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி பிரதேசத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர் என்பதையும்;

(iv) வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுலாத்துறை வசதிகள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மதுநாகல வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய சுற்றுலா வலயத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கான திகதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3310/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மற்றும் இற்றைவரை வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை,

(i) வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலமாக நாட்டிற்குக் கிடைத்த மொத்த வெளிநாட்டுப் பண அனுப்பீடுகளை அமெரிக்க டொலர்களிலும் இலங்கை ரூபாய்களிலும் வெவ்வேறாகவும்;

(ii) தொழில் ஒப்பந்தங்களின் தவறு காரணமாக ஒவ்வொரு வருடமும் நாடு கடத்தப்பட்ட அல்லது திருப்பி அனுப்பப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iv) வெளிநாட்டு வேலைகளுக்காகச் செல்லும் இலங்கையரிடமிருந்து காப்புறுதித் திட்டம் மூலமாக ஈட்டப்பட்ட பணத்தொகையையும்;

(v) சொல்லப்பட்ட காப்புறுதி நிதியங்களிலிருந்து வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4086/ '13

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரதித் தபாலதிபர் திரு. சேனாதீரவுக்கு எதிராக தாபனவிதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் Iவது அட்டவணையின்கீழ் இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) இதில் ஒரு குற்றச்சாட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கு தவறாளியானமையால் இவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மற்றைய குற்றச்சாட்டுப் பத்திரம் சம்பந்தமாக இற்றைவரை முறைசார்ந்த ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்தின் பணிப்பாளராக செயலாற்றுவதற்கு பிரதித் தபாலதிபர் திரு. கே.ஏ.எஸ். சேனாதீரவுக்கு தகைமைகள் கிடையாதென கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் :

(v) திரு. சேனாதீர கருத்திட்டப் பணிப்பாளரென்ற வகையில் முறைகேடான விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள பணத்தை மீளஅறவிடுமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதி கட்டளையிட்டுள்ளார் என்பதையும்

அவர்அறிவாரா?

(ஆ) (i) திரு. சேனாதீர தொடர்பில் எஞ்சியுள்ள மற்றைய குற்றச்சாட்டுப் பத்திரம் சம்பந்தமாக முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணையொன்றினை நடாத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) கருத்திட்டப் பணிப்பாளர் என்ற வகையில் இவர் முறைகேடான விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4281/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013ஆம் ஆண்டின் யூன் மாதம் தொடக்கம் அரசாங்க மருத்துவமனைகளில் நீரிழிவு நோயாளர்களின் "குளுக்கோசு" மட்டத்தை பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படும் குருதிப் பரிசோதனைக்காக பயன்படுத்தப்படும் கீற்று (Blood Glucose Test Strips) கொள்வனவு செய்யப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(ii) குறித்த கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி துணைப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(iii) குறித்த "Blood Glucose Test Strips" ஒன்றின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்;

(iv) அரசாங்க மருத்துவமனைகளில் 2013ஆம் ஆண்டு ஓகத்து மாதம் தொடக்கம் இந்த "Glucose Strips" தட்டுப்பாடு அல்லது முற்றிலும் இல்லாத நிலை அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4571/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான காலப் பகுதியினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ஒவ்வொரு துறைமுகத்துக்கும் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையும் பரிமாற்றப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு துறைமுகத்தினதும் தொழிற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை துறைமுக அதிகாரசபை ஒட்டுமொத்தமாக மேற்படி காலப்பகுதியில் பெற்ற வருமானம் மற்றும் இலாபம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4671/ '13

கௌரவ பி. ஹரிசன்,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு பொது நலவாய அமைப்பின் வர்த்தக மாநாடு நடாத்தப்பட்ட இடம் மற்றும் ஹோட்டல் யாதென்பதையும்;

(ii) மேற்படி மாநாட்டில் பங்கேற்ற வர்த்தகர்கள் பிரதிநிதித்துவம் செய்த நாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாநாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் மூலம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் பொது நலவாய அமைப்பின் வர்த்தகர் சம்மேளனத்தினால் செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாநாட்டின் பின்னர் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் மூலம் இலங்கை அரசிற்கும் மக்களுக்கும் கிடைக்கும் நன்மைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மாநாட்டிற்கு வருகைத்தந்த வர்த்தகர்களினால் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அதிக விருப்பம் காட்டிய விசேட கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4768/ '14

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் வாடகை செலுத்தப்பட்டு பேணிவரப்படுகின்ற உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உப தபால் அதிபர்களது சொந்தப் பணத்தில் தபால் அலுவலக கட்டிடங்களுக்கு வாடகை செலுத்த வேண்டியுள்ளதை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) ரூபா 250/= கட்டிட வாடகைக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4856/ '14

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கும் வீடமைப்புக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கருத்திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் வீடு பெறுனர்களை தெரிவுசெய்யும் போது பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அண்மையில் மக்களுக்கு கையளிக்கப்பட்ட மாளிகாவத்தை வீடமைப்புத் தொகுதியை அதன் முதல் குடியிருப்பாளர்களுக்கே வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4871/ '14

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்புகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தேசிய மின் முறைமை இதுவரையில் இழந்துள்ள மின் கொள்ளளவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் கன்டென்சர் தொகுதிக்கு உப்பு அல்லது அதையொத்த ஏதேனும் இரசாயனப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்ட கூற்றில் உண்மை உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பில் குற்றவாளிகளான நபர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5035/ '14

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தூய்மையான தேங்காய் எண்ணெய்க்கு (Virgin Coconut Oil) சர்வதேச சந்தையில் உயர் கேள்வி நிலவுகின்றது என்பதையும்;

(ii) அதிக விலைகளின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நாட்டில் தூய்மையான தேங்காய் எண்ணெய்யை உற்பத்தி செய்கின்ற தொழில்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டு தூய்மையான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுசரணைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யின் தரத்தை உயர் மட்டத்தில் பேணிவருவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தரக் கட்டுப்பாட்டு முறையியலொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5174/ '14

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இன்றுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்கும் செலுத்தவேண்டியுள்ள கடன் மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5180/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய தேர்தல் தொகுதியில், வெலிபென்னகஹமுல்ல தபால் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக இறுதியாக அடிக்கல் நாட்டப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தபால் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக எத்தனை தடவைகள் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வொரு தடவையும் நடத்தப்பட்ட வைபவங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது சிரமங்களுக்கு மத்தியில் பேணிவரப்படுகின்ற மேற்படி தபால் அலுவலகத்திற்காக நிரந்தர கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு யாதென்பதையும்;

(iii) அதன்படி குறித்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல், வேலைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் மக்கள் உரிமைக்காக கையளித்தல் ஆகியவற்றுக்கான திகதிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5202/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய பக்தர்கள் உம்ரா மற்றும் ஹஜ் யாத்திரைக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவத்துடன் முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்புடைய நபர் ஒரு ஆசிரியராக இருக்கும் பட்சத்தில், இவருக்கு மேற்படி யாத்திரைக்கு சம்பளத்துடனான லீவு உரித்தாகுமா என்பதையும்;

(iii) உம்ரா யாத்திரை மற்றும் ஹஜ் யாத்திரைக்கு வெளிநாடு செல்பவர்களுக்கு எளிமையான விண்ணப்பப்படிவம் மற்றும், வீசா வழங்கும் முறையியலொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான தலையீடு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி யாத்திரையில் ஈடுபடுகின்ற அரசாங்க ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற லீவு நாட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி லீவு நாட்கள் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2731/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோதுமை மா விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு விலை மட்டங்களின் கீழ் பாண் விற்பனை செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) பாண் ஒன்றின் இருக்க வேண்டிய நிறை 450 கிராம்களாக இருக்க வேண்டிய போதிலும் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பாணில் உரிய நிறை கிடையாதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாண் ஒன்றில் இருக்க வேண்டிய உரிய நிறை மற்றும் பாண் ஒன்றுக்கான உரிய விலை பற்றி சம்பந்தப்பட்ட அலுவலர்களால், பேக்கரி உரிமையாளர்களும் பாண் விற்பனையாளர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) உரிய நிறையற்ற மற்றும் உரிய விலையைப் பார்க்கிலும் அதிக விலைக்குப் பாண் விற்பனை செய்பவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைத்தல் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3311/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 செப்டம்பர் மாதத்திலிருந்து இற்றைவரை,

(i) வட - கிழக்கு யுத்தத்தின் பின்னர் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதி முகாம்களின் அமைவிடங்களையும்;

(ii) அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை ஏதுமிருப்பினும் அவற்றையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2010 செப்டம்பர் மாதத்திலிருந்து,

(i) எல்.ரீ.ரீ.ஈ. சந்தேக நபர்களாகக் கைதுசெய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(ii) ஒவ்வொரு முகாமிலும் உள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின் வகைகளையும்;

(iv) அவர்களின் எதிர்கால நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?